# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி : www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 246/பேரூ/2023
நாள்: 17.10.2023

திரு S.N. சுபாஷ்சந்திரபோஸ்,
ஆலங்குளம்,
தென்காசி மாவட்டம். .... மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆலங்குளம் சிறப்பு நிலை பேரூராட்சி
தென்காசி மாவட்டம். .... எதிர்மனுதாரர்

தென்காசி மாவட்டம், ஆலங்குளம், 8/4, அம்பைரோடு என்ற முகவரியைச் சேர்ந்த மனுதாரர் திரு S.N. சுபாஷ்சந்திரபோஸ் என்பவரது 10.07.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.07.2023 அன்று பெறப்பட்டு 246/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தென்காசி மாவட்டம், ஆலங்குளம், 8/4, அம்பைரோடு என்ற முகவரியைச் சேர்ந்த மனுதாரர் திரு S.N. சுபாஷ்சந்திரபோஸ் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"தென்காசி மாவட்டம், ஆலங்குளம் பேரூராட்சியில் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களால் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலங்குளம் பேரூராட்சி 7வது வார்டு உறுப்பினர் திருமதி மோ. சுதா என்பவருக்கு சொந்தமான சொத்து, ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்டு உள்ளது. மேலும் பேரூராட்சித்தலைவர் திருமதி மோ. சுதா ஆலங்குளம் சிறப்பு நிலை பேரூராட்சிக்கு 2022–2023 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய வீட்டு வரி

தொகையை கால வரம்பிற்குள் செலுத்தாமல் தவணை தவறியுள்ளார். வரிவிதிப்பு எண். 465–ல் ரூபாய் 3930/–, வரி விதிப்பு எண். 466–ல் ரூபாய் 1040, வரிவிதிப்பு எண். 467–ல் ரூபாய் 1040, வரி விதிப்பு எண். 5604–ல் ரூபாய் 120 வரி விதிப்பு எண். 5605–ல் ரூபாய் 186, மற்றும் வரி விதிப்பு எண். 5562–ல் ரூபாய் 184 ஆகியவை ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சி தலைவர் திருமதி சுதா என்பவரின் பெயரில் உள்ளது. மேலும் பேரூராட்சிக்கு வரி பாக்கி உள்ளதால், ஆலங்குளம் சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலகம் மூலம் கடந்த 07.12.2022 அன்று விரிவிதிப்பு எண்கள் முறையே 465, 466, 467, 5604, 5605, 5562 ஆகியவற்றிற்கு முறையாக நகராட்சிகளின் சட்டம் பிரிவு 313, 347 மற்றும் 4வது செட்யூலை சேர்ந்த 30 முதல் 35 வரை உள்ள விதிகளின்படி ஆலங்குளம் பேரூராட்சித்தலைவர் திருமதி மோ. சுதா என்பவருக்கு அறிவிப்பு செய்யப்பட்டது. பின்பு 03.03.2023 அன்று மேற்காணும் வரித்தொகையினை செலுத்த வேண்டி ஆலங்குளம் பேரூராட்சித்தலைவர் திருமதி. மோ. சுதா அவர்களுக்கு இரண்டாவது முறையாக அறிவிப்பு செய்யப்பட்டது. அதன்பின் 10.04.2023 அன்று இறுதியாக மூன்றாவது முறையாக திருமதி மோ. சுதா என்பவருக்கு அறிவிப்பு கிடைத்த ஏழு தினங்களுக்குள் வீட்டு வரித் தொகை கட்டவில்லை என்றால் வீடு ஜப்தி செய்யப்படும் என்று அறிவிப்பு கொடுக்கப்பட்டும் வீட்டு வரி செலுத்தாமல் இருந்துள்ளார்.

ஆலங்குளம் பேரூராட்சி மக்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய பேரூராட்சித்தலைவரே வீட்டு வரி கட்டாமல் நிலுவையில் வைத்துள்ளதால் ஆலங்குளம் பேரூராட்சி தலைவர் திருமதி சுதா என்பவர் நகராட்சி சட்டம் 1920 பிரிவு 50 (hh)ன் படி நகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைகளை இச்சட்டத்தின்கீழ் அவரிடம் அதற்காக பட்டி அல்லது அறிவிப்பு கொடுக்கப்பட்ட பின்னர் 3 திங்களுக்குள் செலுத்த தவறியிருந்தால் பேரூராட்சியில் மன்றத்தலைவராக இருப்பதற்கு தகுதியை இழந்தவர் ஆகிறார். எனவே மேற்கண்ட திருமதி. மோ.சுதா அவர்கள் நகராட்சிகளின் சட்டத்தை மீறுவதால் தாங்கள் ஆலங்குளம் பேரூராட்சித்தலைவர் திருமதி மோ.சுதா நகராட்சி சட்டங்களுக்கு புறம்பாக செயல்பட்டதற்காக தகுதி நீக்கம் செய்ய ஆணை பிறப்பிக்குமாறு மிக தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். " என தெரிவித்துள்ளார்".

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 18.08.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆலங்குளம், பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 24.08.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சியில் திருமதி மோ. சுதா அவர்கள் 7வது வார்டு உறுப்பினராக பொதுமக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களால் ஆலங்குளம் பேரூராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஆலங்குளம் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி சுதா அவர்களின் பெயரில் கீழ்க்கண்டவாறு சொத்துவரி வரிவிதிப்புகள் உள்ளன.

| வ.எண் | வார்டு எண் | தெரு பெயர் | கதவு எண் | வரி விதிப்பு எண் | வரிவிதிப்பாளர் பெயர் (திருமதி) | சொத்து வரி கேட்பு தொகை ரூ. | சொத்துவரி (2022–23) செலுத்திய நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | தென்காசி ரோடு | 679 A | 465 | மோ.சுதா | 3930 | 08.05.2023 |
| 2 | 1 | தென்காசி ரோடு | 679 B | 466 | மோ.சுதா | 1040 | 08.05.2023 |
| 3 | 1 | தென்காசி ரோடு | 679 C | 467 | மோ.சுதா | 1040 | 08.05.2023 |
| 4 | 7 | பாரதியார் தெரு | 16A/1 | 5562 | மோ.சுதா | 184 | 08.05.2023 |
| 5 | 7 | பாரதியார் தெரு | 54 | 5604 | மோ.சுதா | 120 | 08.05.2023 |
| 6 | 7 | பாரதியார் தெரு | 54 B | 5605 | மோ.சுதா | 186 | 08.05.2023 |

மேற்கண்ட கட்டடங்களுக்கு 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான சொத்துவரி செலுத்தப்படாமல் இருந்ததால் சொத்துவரி செலுத்த கோரி 07.12.2022 அன்று பேரூராட்சி மூலம் சொத்துவரி அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக மீண்டும் 03.03.2023 அன்று சொத்துவரி செலுத்த கோரி சொத்துவரி அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சொத்துவரி தொகையினை பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி. மோ. சுதா அவர்கள் உரிய கால அளவிற்குள் செலுத்த கோரி ஆலங்குளம் பேரூராட்சி அலுவலக ந.க.எண். 205/2023 நாள் 10.04.2023– இன்படி ஏழு தினங்களுக்குள் செலுத்தக் கோரி அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பேரூராட்சி மன்றத் தலைவர் அவர்கள் சொத்துவரி செலுத்தாமல் நிலுவையில் வைத்துள்ளதால் ஆலங்குளம் பேரூராட்சி தலைவர் அவர்களை நகராட்சி சட்டம் 1920 பிரிவு 50(hh)இன்படி மனுதாரர் திரு. எஸ்.என்.சுபாஷ்சந்திரபோஸ், ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சி 9வது வார்டு மன்ற உறுப்பினர், பேரூராட்சி மன்றத் தலைவர் அவர்களை தகுதி நீக்கம் செய்ய ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுள்ளார். ஆலங்குளம் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி. சுதா அவர்களின் பெயரில் உள்ள மேற்கண்ட சொத்துவரி விரிவிதிப்புகளுக்கு 08.05.2023 அன்று சொத்துவரி செலுத்தப்பட்டுள்ளது. நிலுவை தொகை ஏதும் இல்லை என்ற விபரத்தினையும் பணிந்து சமர்ப்பித்துக் கொள்கிறேன்

4) மனுதாரரும், மற்றும் ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 28.08.2023. அன்று தென்காசி முகாமில் (Circuit House) நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 28.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் பேரூராட்சி மன்றத்தலைவர் திருமதி.மோ.சுதா என்பவர் தனது வீட்டிற்கான சொத்து வரியை கால வரம்பிற்குள் செலுத்தாமல் தவணை தவறியுள்ளார். இது குறித்து பேரூராட்சியில் புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைகளை செலுத்தத் தவறிய திருமதி.மோ. சுதா அவர்களின் மீது நகராட்சி சட்டம் 1920 பிரிவு 50 (hh)ன் கீழ் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவண செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்நேர்வு தொடர்பாக எனது 10.7.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்

6) எதிர்மனுதாரான ஆலங்குளம் சிறப்பு நிலை பேரூராட்சியின் செயல் அலுவலராக பணிபுரியும் திரு. ஜா. மாணிக்கராஜ் என்பவர் 28.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சியின் 7வது வார்டு உறுப்பினரும், ஆலங்குளம் பேரூராட்சி மன்றத் தலைவருமான திருமதி மோ.சுதா என்பவர் ஆலங்குளம் பேரூராட்சி, தென்காசி ரோடு கதவு எண் 679 A, 679B, 679C, 16 A/1, 54 மற்றும் 54 B ஆகியவற்றிற்கு சொத்து வரி செலுத்தப்படாமல் குறிப்பிட்ட கால அளவிற்குள் சொத்து வரி செலுத்தாததால், திருமதி சுதா அவர்களை சொத்து வரி செலுத்தக்கோரி 7.12.2022 அன்று முதல் தாக்கீதும், பின்னர் 3.3.2023 அன்றும் பின்னர் 10.4.2023 அன்றும் மொத்தம் 3 அறிவிப்புகள் மேற்கண்ட திருமதி. மோ.சுதா அவர்களுக்கு அனுப்பப்பட்டது. மேற்கண்ட அறிவிப்புகளையடுத்து திருமதி. மோ.சுதா அவர்கள் மூலம் 08.05.2023 அன்று சொத்து வரி செலுத்தப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை தெரிவித்து சொத்து வரி செலுத்தியதற்கான நகலை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் எனது 24.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

7) ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சி மன்றத்தலைவர் திருமதி.மோ.சுதா அவர்களை 25.09.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.09.2023 தேதியிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் 25.09.2023 அன்று விசாரணைக்கு வர இயலாத காரணத்தை தெரிவித்து பிரிதொரு நாளில் விசாரணையை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார்.

8) பின்னர் 3.10.2023 அன்று மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பேரூராட்சிமன்றத் தலைவர் திருமதி. மோ. சுதா என்பவரை ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"ஆலங்குளம் பேரூராட்சியின் தலைவராக பொறுப்பு வகிக்கும் நான் தென்காசி மாவட்டம், ஆலங்குளம் பேரூராட்சி, தென்காசி ரோடு கதவு எண் 679/1 ல் உள்ள எனக்கு சொந்தமான வீடு மற்றும் 2 கடைகள் ஆகியவற்றிற்கான 2022–23 முதல் அரையாண்டிற்கும் மற்றும் இரண்டாம் அரையாண்டிற்குமாக சொத்து வரி மற்றும் திடக்கழிவு மேலாண்மை சேவை கட்டணத்தை 3 மாத காலத்திற்குள் செலுத்துமாறு பேரூராட்சியால் 7.12.2022 அன்று எனக்கு தாக்கீது அனுப்பப்பட்டதாக பேரூராட்சியால் தெரிவிக்கப்பட்ட நிலையில், மேற்கண்ட 7.12.2022 நாளிட்ட தாக்கீது என்னால் பெறப்படவில்லை. மேலும் அனைத்து தாக்கீதுகளிலும் கண்டுள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரூராட்சியில் சொத்து வரி கூட்டியதாலும், பேரூராட்சியில் எனக்கு ஏற்பட்ட பணிச் சுமை மற்றும் எனது கவனக் குறைவு காரணமாகவும் நான்கு வழி புறச்சாலையில், நெடுஞ்சாலைத் துறையால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததன் காரணமாக, இணையதள சேவையில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறின் காரணமாகவும், 5 மாதங்கள் கழித்து,

8.5.2023 அன்று பேரூராட்சிக்கு மேற்கண்ட சொத்து வரி கட்டணம் செலுத்தப்பட்டது. மேற்கண்ட சொத்து வரி செலுத்துவதில் இதுவரை எவ்வித காலதாமதமும் செய்யவில்லை. மேலும், மேற்கண்ட காலத்திற்கான அதாவது 2022–23 ற்கான குடிநீர் வரி உரிய காலத்தில் செலுத்தப்பட்டுவிட்டது. எனவே, வேண்டுமென்றே நான் காலதாமதம் செய்யவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் எனது மேற்கண்ட வீட்டிற்கான சொத்து வரி செலுத்துவதில் எவ்வித காலதாமதம் இனி ஏற்படாது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்."

9) மேலும், ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சி மன்றத்தலைவர் திருமதி. மோ. சுதா என்பவர் தனது 3.10.2023 நாளிட்ட எழுத்து பூர்வமான கூடுதல் வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"புகார்தாரர் திரு. சுபாஷ்சந்திரபோஸ், த/பெ. நயினார் ராஜா என்பவரின் (9வது வார்டு உறுப்பினர்) 10.07.2023 நாளிடப்பட்ட புகாரில் 2022–23 ஆலங்குளம் சிறப்பு நிலை பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய எனது வீட்டு வரி காலதாமதமாக செலுத்தியதாக புகார் அளிக்கப்பட்டது. எனக்கு பாத்தியப்பட்ட 2022 ஏப்ரல் முதல் 2023 மார்ச்வரை காலகட்ட சொத்துவரியை முறையே:-

| | வரிவிதிப்பு எண் | | |
|---|---|---|---|
| 1. | 465 | ரூ.3930/- | திடக்கழிவு மேலாண்மை சேவை கட்டணம் நீங்கலாக (ரூ. 120X6=720-) |
| 2. | 466 | ரூ.1040/- | |
| 3. | 467 | ரூ.1040/- | |
| 4. | 5604 | ரூ.120/- | |
| 5. | 5305 | ரூ.186/- | |
| 6 | 5562 | ரூ.84/- | |
| | | ரூ.6,400/– | |

07.12.2022 அன்று பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் அனுப்பப்பட்டதாக கூறப்படும் அறிவிப்பின் நகல்களில் காணப்படும் கையொப்பம் எனது கையொப்பம் இல்லை என்றும், வேறு ஒரு நபர் போலியாக எனது கையொப்பத்தை இட்டுள்ளார் என்பதையும் இதன் மூலம் தெரியப்படுத்திக்கொள்கிறேன் மற்றும் தென்காசி–திருநெல்வேலி நான்குவழிச்சாலை பணி நடைபெற்று வந்ததால் இன்டர்நெட் கேபிள் பராமரிப்புப் பணிகளும் நடைபெற்று வந்தது. அதன் மூலம் இணையதள சேவை முழுவதுமாக துண்டிக்கப்பட்டிருந்தது.

மேலும் என்னுடைய பணிச்சுமை காரணமாகவும், எனது உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும் (பெண்கள் சார்ந்த உடல்நிலை பிரச்சனை) இணைய தள சேவை இடையூறாலும் குறித்த கால வரையறைக்குள் என்னால் சொத்து வரி கட்ட இயலவில்லை. ஆனால் என்னுடைய பெயரில் உள்ள குடிநீர் கட்டணம் குறிப்பிட்ட காலத்திற்குள் பேரூராட்சிக்கு செலுத்தி இருக்கிறேன். எனவே புகாரில் கூறியுள்ளது போல வேண்டுமென்றே காலதாமதமாக சொத்துவரி செலுத்த வேண்டும் என்ற உள்நோக்கம் எனக்கு கிடையாது.

எனவே, என் மீது கொடுக்கப்பட்ட இந்த புகார் முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும். நான் பேரூராட்சியில் சிறப்பாக சேவையாற்றி வருவதாலும், பொது மக்கள் மத்தியில் எனக்கு இருக்கும் நற்பெயரையும், மதிப்பையும் கெடுக்கும் நோக்கத்தில் இந்த புகார் பொய்யாக

புனையப்பட்டு தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் என் மீது இதுவரை எந்த விதமான நிர்வாக குறைபாடுகளும் ஏற்பட்டதில்லை என்பதையும் தங்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

10) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, அவரது வாக்குமூலம் மற்றும் ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சி மன்றத் தலைவரின் வாக்கு மூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

தென்காசி மாவட்டம், ஆலங்குளத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. எஸ்.என். சுபாஷ்சந்திரபோஸ் என்பவர் தனது 10.07.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில், ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சியில் பேரூராட்சி மன்றத்தலைவர் திருமதி.மோ. சுதா என்பவர் தனக்கு சொந்தமான கட்டடங்களுக்கு 2022–23ஆம் ஆண்டிற்கு பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரியை குறிப்பிட்ட காலவரம்பிற்குள் செலுத்தாமல் நிலுவையில் வைத்ததன் மூலம் நகராட்சி விதிகளுக்கு முரண்பாடாக செயல்பட்டுள்ளார் என புகார் தெரிவித்து திருமதி. மோ. சுதா என்பவரை பேரூராட்சி மன்றத்தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்ய ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சியின் 7வது வார்டு உறுப்பினரும் மற்றும் பேரூராட்சி மன்றத்தலைவருமான திருமதி.மோ.சுதா என்பவருடைய பேரூராட்சிக்குட்பட்ட சொந்தமான, வரி விதிப்பு எண்கள் 465,466, 467 கொண்ட 3 வணிகக் கட்டடங்களுக்குரிய 2022–23ஆம் ஆண்டிற்கான சொத்து வரி முறையே ரூ. 3,930/–, ரூ. 1,040/–, மற்றும் ரூ.1,040/– செலுத்தக் கோரியும் மற்றும் வரி விதிப்பு எண்கள் 5562, 5604, 5605 கொண்ட 3 சொந்த குடியிருப்பு கட்டடங்களுக்குரிய 2022–23 ஆம் ஆண்டிறகான சொத்துவரி முறையே ரூ.184/–, ரூ.120/–, மற்றும் ரூ. 186/– உரிய காலத்திற்குள் செலுத்தக் கோரியும், நகராட்சிகளின் சட்டம் பிரிவு 313,347 மற்றும் 4வது ஷெட்யூலைச் சேர்ந்த 30 முதல் 35 வரையுள்ள விதிகளின்கீழ் ஆலங்குளம் பேரூராட்சி செயல் அலுவலரால் 07.12.2022 நாளிட்ட அறிவிப்புகள் திருமதி மோ. சுதா என்பவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்காணும் பேரூராட்சி மன்றத்தலைவர் திருமதி.மோ.சுதா என்பவரின் பெயரிலுள்ள கட்டடங்களுக்கான நிலுவையில் இருந்த சொத்துவரி தொகைகள் 08.05.2023 அன்று அதாவது அறிவிப்பு வழங்கி ஐந்து மாதம் கழித்து ஆலங்குளம் பேரூராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.

ஆலங்குளம் பேரூராட்சியின் தலைவராக பொறுப்பு வகிக்கும் திருமதி. மோ. சுதா என்பவர் 2022–2023 நிதியாண்டிற்கான குடிநீர்வரி உரிய காலத்தில் செலுத்தப்பட்டு விட்டதாகவும், சொத்துவரி மட்டுமே காலந்தாழ்த்தி செலுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். அவ்வாறு தாமதமாக சொத்துவரியினை செலுத்தியமைக்காக அவர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள காரணங்கள் ஏற்கத்தக்கதல்ல.

(i) அன்னார் மன்றத்தலைவராக போட்டியிட மனுதாக்கல் செய்யும்போது வரிநிலுவை இல்லாச்சான்று சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே அன்னாரின் மனு ஏற்கப்படும் என்பது அவருக்கு தெரிந்த ஒன்றே.

(ii) மேலும், குடிநீர் வரி உரிய காலத்திற்குள் செலுத்தப்பட்டுள்ளதாக வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், சொத்து வரியும் அன்னாரால் பேரூராட்சிக்கு உரிய காலத்திற்குள் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அதற்கு தனியாக அறிவிப்பு வழங்கி ஒப்புகை சீட்டு பெறப்படவேண்டிய அவசியம் இல்லை.

பேரூராட்சி தலைவரானவர் அப்பேரூராட்சி நிர்வாகத்திற்கே வழிகாட்டி ஆவார். அவர் அனைத்து வரியினையும் செலுத்தி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு மற்றும் கடமை அவருக்கு உண்டு. எனவே, அவர் காலந்தாழ்த்தி சொத்துவரி செலுத்தியமைக்காக குறிப்பிடும் காரணங்கள் முறையானதாக இல்லை என இம்முறைமன்றம் கருதுகிறது.

1998ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், பிரிவு 32 (1) (j) ன் கீழ் (முந்தைய 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 50 (1) (hh) ன் கீழும்) ஒரு உறுப்பினர் அல்லது ஒரு தலைவர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைகளை இச்சட்டத்தின்கீழ் அவரிடம் அதற்காக பட்டி அல்லது அறிவிப்பு கொடுக்கப்பட்ட பின்னர் மூன்று திங்களுக்குள் செலுத்தத் தவறியிருந்தாரெனில், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டப்பிரிவு 35–க்கு உட்பட்டும் தலைவர் அல்லது உறுப்பினர் பதவி வகிப்பதிலிருந்து நீக்கம் பெறுவார் என்பதை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

Tamil Nadu Urban Local Bodies Act, 1998 Section **32.Disqualification of Chairperson or Councilor**:-

(1) Subject to the provisions of Section 35, a Councilor or a Chairperson shall cease to hold office as such, if he

(a) xxxx xxxxx
(b) xxxx xxxxx

xxxx xxxxx xxxxx

(j) fails to pay arrears of any kind due by him (otherwise than in a fiduciary capacity) to the municipality within three months after a bill, notice or direction has been served upon him under this Act or where in the case of any arrears under this Act, does not require the service of any bill, notice or direction within three months after a notice requiring payment of the arrears (which notice it shall be the duty of the Commissioner to serve at the earliest possible date) has been duly served upon by the Commissioner.

இந்நிலையில், ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சி மன்றத்தலைவர் திருமதி.மோ.சுதா என்பவர் தனக்கு சொந்தமான வணிக மற்றும் குடியிருப்பு கட்டடங்களுக்கான 2022–23 ஆம் ஆண்டிற்கான சொத்துவரித் தொகையை காலந்தாழ்த்தி செலுத்தியுள்ளது தற்போது நடைமுறையில் உள்ள 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள பிரிவு 32 (1) (j) -ன் கீழ் (முந்தைய 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு50 (1) (hh)–ன் கீழும்) உட்பட்டிருப்பதால் இப்பொருள் குறித்து தக்க மேல் நடவடிக்கை

எடுக்கும் பொருட்டு உரிய ஆவணங்களுடன் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பப்படுகிறது.

2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028

2) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்) பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,சென்னை –600 028.

3) செயல் அலுவலர்,
ஆலங்குளம் சிறப்பு நிலை பேரூராட்சி,
தென்காசி மாவட்டம்.

4) திரு. S.N. சுபாஷ்சந்திரபோஸ்
8/4, அம்பைரோடு, ஆலங்குளம்,
தென்காசி மாவட்டம்–627851

5) திருமதி. மோ. சுதா,
பேரூராட்சிமன்றத்தலைவர்,
ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சி,
தென்காசி மாவட்டம்.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்
19/X/2023